தினமலர்
உண்மையின் உரைகல்
நிறுவனர் டி.வி. ராமசுப்பையர்
வியாழன், ஏப்ரல் 9, 2015
பங்குனி 26, ஜய வருடம்

# எந்த வறட்சியையும் தாங்கி வளரும் 'காயா' மரம்

## திண்டுக்கல்லில் சாகுபடி

திண்டுக்கல், ஏப். 10–

எந்த வறட்சியையும் தாங்கி வளரும் 'காயா' மரம் திண்டுக்கல்லில் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த மரங்கள் கேரளாவில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இவை 'படாக்' மரம் வகையை சேர்ந்தது. 15 ஆண்டுகளில் 100 அடி வளரும். பக்க கிளைகள் குறைவாக இருப்பதால் கதவு, ஜன்னல் போன்ற வீட்டு உபயோக பொருட்கள் தயாரிக்க பயன்படும்.

மரத்தின் உள்பகுதி சிவப்பாக இருப்பதால், அதில் தயாரிக்கப்படும் பொருட்கள் நல்ல நிறமாக இருக்கும். பல மாதங்கள் வரை நீரின்றி வளரும். இதனால் எந்த வறட்சியையும் தாங்கி நிற்கும். இதனை திண்டுக்கல் அருகே பலக்கனூத்து விவசாயி மணிவேல் ஒரு ஏக்கரில் ஊடுபயிராக சாகுபடி செய்துள்ளார்.

காந்திகிராம வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் சரவணன் கூறியதாவது: வறட்சியை தாங்கி வளருவதால் மானாவாரியாக சாகுபடி செய்யலாம். பக்க கிளைகள் இல்லாததால் அதிக நிழல் தராது. நிலத்தடிநீரை அதிகளவில் உறிஞ்சாது. இதனால் மற்ற பயிர்களுக்கு ஊடுபயிராக பயிரிடலாம். ஒரு ஏக்கருக்கு 200 மரங்கள் வளர்க்கலாம். நன்கு விளைந்த மரம் ரூ.50 ஆயிரம் வரை விலை போகும். பராமரிப்பு செலவு குறைவு, என்றார்.



திண்டுக்கல் அருகே பலக்கனூத்து பகுதியில் பயிரிடப்பட்டுள்ள காயாமரம்.

**Source: Http://epaper.dinamalar.com/index.aspx?EID=356&dt=20150410#**